### கொங்கு நாட்டின் நீண்டநாள் கனவு நிறைவேறியது! ரூ.1916.41 கோடி செலவில்

# அத்திக்கடவு - அவிநாசி திட்டம் தொடங்கியது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஆக. 19 -**

**கொங்கு நாட்டின் நீண்டநாள் கனவு நிறைவேறியது. ஈரோடு, திருப்பூர், கோவை மாவட்டங்களில் 24,468 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் அத்திக்கடவு - அவிநாசி திட்டம் ரூ.1916.41 கோடி செலவில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்கள் பயன்பாட்டிற்காக காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கிவைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.8.2024) தலைமைச் செயலகத்தில், நீர்வளத் துறை சார்பில் ஈரோடு, திருப்பூர், கோவை மாவட்டங்களில் 24,468 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் வகையில் 1916.41 கோடி ரூபாய் செலவில் நிறை வேற்றப்பட்டுள்ள அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தினைக் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் விவசாயத்தை மேம்படுத்தும் வகையிலும், மக்களின் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், கிடைக்கப் பெறும் நீரை வீணாக்காமல் நீர்நிலைகளில் தேக்கி வைக்கும் பொருட்டும், புதிய நீராதாரங்களை உருவாக்குதல், ஏற்கெனவே உள்ள நீர்நிலைகள் மற்றும் அதன் உட்கட்டமைப்புகளை நல்ல முறையில் பராமரித்தல், பாசனக் கட்டமைப்புகளான அணைகள், அணைக்கட்டுகள், நிலத்தடி தடுப்புச் சுவர்கள், கால்வாய்கள், வாய்க்கால்கள், ஏரிகள் போன்றவற்றை உருவாக்குதல், புனரமைத்தல் மற்றும் பராமரித்தல் போன்ற பல்வேறு முக்கியப் பணிகளை நீர்வளத்துறை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தீவிர முயற்சிகளின் பயனாக தற்போது அத்திக்கடவு - அவிநாசி திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

**தலைவர் கலைஞர் முனைந்து நடவடிக்கை!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கோவை மாவட்ட விவசாயிகளின் நீண்ட காலக் கோரிக்கைகளை ஏற்று 1972ஆம் ஆண்டில் அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தைச் செயல்படுத்திட முனைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டார். அந்நிலையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் 1976க்குப் பின் இத்திட்டத்தில் தொய்வு ஏற்பட்டது. மீண்டும் 1996ல் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இத்திட்டம் குறித்து மறுபடியும் ஆய்வு செய்து, திட்டத்தினை நிறைவேற்றிட ஒப்புதல் வழங்கினார். ஆனால் ஆட்சி மாற்றம் எற்பட்டதால் இத்திட்டத்தில் சுணக்கம் ஏற்பட்டது.

பின்னர், 2019இல் இத்திட்டத்தைத் தொடங்கி நிறைவேற்றும் பணிகள் தொடர்ந்தன என்றாலும், 2021இல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி அமைந்த பின்தான், இத்திட்டத்தினை நிறைவேற்றிட உறுதிபூண்டு, 1,916.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் விரைவு படுத்தப்பட்டன.

அதன் தொடர்ச்சியாகத் திட்டப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது அனைத்துப்பணிகளும் முடிவடைந்துள்ளன. சோதனை ஓட்டப் பணிகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ள நிலையில், அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.

**1045 ஏரிகள், குளங்களில் நீர் நிரப்பப்படும்!**

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் பவானி ஆற்றில் காளிங்கராயன் அணைக்கட்டின் கீழ்ப்புறத்திலிருந்து ஆண்டொன்றிற்கு 1.50 டி.எம்.சி உபரி நீரை விநாடிக்கு 250 கன அடி வீதம் 70 நாட்களுக்கு நீரேற்று முறையில், 1065 கி.மீ. நீளத்திற்கு நிலத்தடியில் குழாய்ப் பதிப்பின் மூலம் ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 24,468 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் வகையில் நீர்வளத்துறையின் 32 ஏரிகள், ஊராட்சி ஒன்றியத்தின் 42 ஏரிகள் மற்றும் 971 குளம் குட்டைகள், என மொத்தம் 1045 எண்ணிக்கையிலான ஏரிகள், குளம், குட்டைகளில் நீர் நிரப்பப்படும்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர்சிவ் தாஸ் மீனா, நீர்வளத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், நீர்வளத்துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் சா.மன்மதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஈரோட்டிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.ஆர்.ஈஸ்வரன், ஏ.ஜி.வெங்கடாசலம், திருமதி சி.சரஸ்வதி, ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி எஸ்.நாகரத்தினம், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா, திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.8.2024) தலைமைச் செயலகத்தில், நீர்வளத் துறை சார்பில் ஈரோடு, திருப்பூர், கோவை மாவட்டங்களில் 24,468 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் வகையில் 1916.41 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள அத்திக்கடவு அவிநாசி திட்டத்தினைக் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நீர்வளத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், நீர்வளத்துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் சா.மன்மதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ஈரோட்டிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.ஆர். ஈஸ்வரன், ஏ.ஜி. வெங்கடாசலம், திருமதி சி. சரஸ்வதி, ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி எஸ். நாகரத்தினம், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா, திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தா. கிறிஸ்துராஜ், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### இறுதிவரை கொள்கை முரசமென ஒலித்த

# முரசொலி மாறனின் திராவிட இயக்கப் பயணத்தை - இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் சென்று நன்றி செலுத்துவோம்!

## ‘முரசொலி’ வளாகத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கி - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, ஆக.19 -**

**அரசியல் மேதையும் - ‘தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சி’ எனப் புகழ்ந்துரைக்கும் அளவிற்குச் சிறப்புகளோடு விளங்கியவரும், ஒன்றிய முன்னாள் அமைச்சருமான முரசொலி மாறன் அவர்களுக்கு, நேற்று முன்தினம் 91வது பிறந்தநாளாகும்.**

**இந்நாளில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை- முரசொலி வளாக முகப்பில் அமைந்துள்ள முரசொலி மாறன் அவர்களின் திருவுருவச் சிலைக்குக் கீழே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி வணங்கி, மரியாதை செலுத்தினார்.**

**மேலும், இந்நாளையொட்டி விடுத்த சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “இறுதிவரை கொள்கை முரசமென ஒலித்த முரசொலி மாறனின் திராவிட இயக்கப் பயணத்தை இன்றைய தலைமுறையினருக்கும் எடுத்துச் சென்று அவருக்கு நன்றி செலுத்துவோம்!” என்று சூளுரைத்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

தலைவர் கலைஞரின் மனசாட்சி ஆகவும், டெல்லியில் கழகத்தின் முகமாகவும், பின்னாளில் உலக அரங்கில் இந்தியா மட்டுமல்லாது அனைத்து வளரும் நாடுகளின் குரலாகவும் மிளிர்ந்த முரசொலி மாறன் அவர்களின் 91–ஆவது பிறந்தநாள் இன்று!

“ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?”, “திராவிட இயக்க வரலாறு”, “மாநில சுயாட்சி” என அவர் படைத்தளித்த ஆக்கங்கள் கழகத்தின் அறிவுப் புதையலாகத் திகழ்கின்றன.

இறுதிவரை கொள்கை முரசமென ஒலித்த முரசொலி மாறனின் திராவிட இயக்கப் பயணத்தை இன்றைய தலைமுறையினருக்கும் எடுத்துச் சென்று அவருக்கு நன்றி செலுத்துவோம்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அரசியல் மேதை – முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 91வது பிறந்தநாளையொட்டி சென்னை, முரசொலி வளாகத்திலுள்ள முரசொலி மாறன் அவர்களின் திருவுருவச் சிலைக்குக் கீழ் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முரசொலி செல்வம், துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் க.பொன்முடி, திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எ.வ.வேலு, மு.க.தமிழரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழகத் தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி எஸ்.முருகன், கழக செய்தித் தொடர்புச் செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மாவட்டச் செயலாளர்கள் நே. சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தடங்கம் சுப்பிரமணி, ‘முரசொலி’ நிர்வாக ஆலோசகர் மற்றும் தணிக்கையாளர் டி.சிவசுப்பிரமணியன், முரசொலி பொது மேலாளர் எஸ்.ராஜசேகரன், முரசொலி செய்தி ஆசிரியர் கு.சேது, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, இரா.கிரிராஜன், தஞ்சை முரசொலி, கழக தீர்மானக்குழுத் தலைவர் தமிழ்தாசன், அக்ரி கணேசன், பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., ந.இராமலிங்கம், மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், கே.ஏழுமலை, அரிமா சு.சேகர், நந்தனம் மதி மற்றும் கோவை ராம்பிரபு, சைதை எஸ்.குணசேகரன், வி.எஸ்.ராஜ், பொன்னேரி வழக்கறிஞர் வெ.அன்புவாணன், எம்.டி.ஆர்.நாதன், வழக்கறிஞர் பெ.ரகு, வழக்கறிஞர் நன்மாறன், சிட்டிபாபு, அதியமான், பரிதி இளம்சுருதி, தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் – மாற்றுத் திறனாளிகள் நல வாரிய உறுப்பினர் ரெ.தங்கம், சரிதா தங்கம் உள்ளிட்ட சென்னை மாவட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (17.8.2024) அரசியல் மேதை – முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 91வது பிறந்தநாளையொட்டி சென்னை, முரசொலி வளாகத்திலுள்ள முரசொலி மாறன் அவர்களின் திருவுருவச் சிலைக்குக் கீழ் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முரசொலி செல்வம், துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் க.பொன்முடி, திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எ.வ.வேலு, மு.க.தமிழரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழகத் தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி எஸ்.முருகன், கழக செய்தித் தொடர்புச் செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மாவட்டச் செயலாளர்கள் நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தடங்கம் சுப்பிரமணி, ‘முரசொலி’ நிர்வாக ஆலோசகர் மற்றும் தணிக்கையாளர் டி.சிவசுப்பிரமணியன், முரசொலி பொது மேலாளர் எஸ்.ராஜசேகரன், முரசொலி செய்தி ஆசிரியர் கு.சேது, நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், முரசொலி அலுவலர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.